ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ எங்கள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ எங்கள் ॥

## திருக்கோட்டியூர்

‡எங்கள் எம்மிறை எம்பிரான்⋆
இமையோர்க்கு நாயகன்⋆ ஏத்தடியவர்
தங்கள் தம் மனத்துப்⋆ பிரியாதருள் புரிவான்⋆
பொங்கு தண்ணருவி புதம் செய்யப்⋆
பொன்களே சிதறும் இலங்கொளி⋆
செங்கமலம் மலரும்⋆ திருக்கோட்டியூரானே (1)

எவ்வநோய் தவிர்ப்பான்⋆ எமக்கிறை
இன்னகைத் துவர் வாய்⋆ நில மகள்
செவ்வி தோய வல்லான்⋆ திருமா மகட்கினியான்⋆
மௌவல் மாலை வண்டாடும்⋆ மல்லிகை
மாலையொடு மணந்து⋆ மாருதம்
தெய்வம் நாற வரும்⋆ திருக்கோட்டியூரானே (2)

வெள்ளியான் கரியான்⋆ மணி நிற வண்ணன்
விண்ணவர் தமக்கிறை⋆ எமக்-
கொள்ளியான் உயர்ந்தான்⋆ உலகேழும் உண்டுமிழ்ந்தான்⋆
துள்ளு நீர் மொண்டு கொண்டு⋆ சாமரைக் கற்றை
சந்தனம் உந்தி வந்தசை⋆
தெள்ளு நீர்ப் புறவில்⋆ திருக்கோட்டியூரானே (3)

ஏறும் ஏறி இலங்கும் ஒண் மழுப் பற்றும்⋆ ஈசற்-
கிசைந்து⋆ உடம்பில் ஓர்
கூறு தான் கொடுத்தான்⋆ குல மாமகட்கினியான்⋆
நாறு சண்பக மல்லிகை மலர் புல்கி⋆
இன்னிள வண்டு⋆ நல் நறுந்
தேறல் வாய் மடுக்கும்⋆ திருக்கோட்டியூரானே (4)

வங்க மா கடல் வண்ணன்⋆ மா மணி வண்ணன்
    விண்ணவர் கோன்⋆ மது மலர்த்
தொங்கல் நீள் முடியான்⋆ நெடியான் படி கடந்தான்⋆
    மங்குல் தோய் மணி மாட வெண் கொடி⋆
மாகமீதுயர்ந்தேறி⋆ வான் உயர்
    திங்கள் தான் அணவும்⋆ திருக்கோட்டியூரானே (5)

காவலன் இலங்கைக்கிறை கலங்கச்⋆
    சரம் செல உய்த்து⋆ மற்றவன்
ஏவலம் தவிர்த்தான்⋆ என்னை ஆளுடை எம்பிரான்⋆
    நாவலம் புவி மன்னர் வந்து வணங்க⋆ மால்
உறைகின்றதிங்கென⋆
    தேவர் வந்திறைஞ்சும்⋆ திருக்கோட்டியூரானே (6)

கன்று கொண்டு விளங்கனி எறிந்து⋆ ஆநிரைக்-
    கழிவென்று⋆ மா மழை
நின்று காத்துகந்தான்⋆ நில மாமகட்கினியான்⋆
    குன்றின் முல்லையின் வாசமும்⋆ குளிர்
மல்லிகை மணமும் அளைந்து⋆ இளந்
    தென்றல் வந்துலவும்⋆ திருக்கோட்டியூரானே (7)

பூங்குருந்தொசித்தானை காய்ந்து⋆ அரிமாச்
    செகுத்து⋆ அடியேனை ஆள் உகந்து
ஈங்கென்னுள் புகுந்தான்⋆ இமையோர்கள் தம் பெருமான்⋆
    தூங்கு தண் பலவின் கனி⋆ தொகு
வாழையின் கனியொடு மாங்கனி⋆
    தேங்கு தண் புனல் சூழ்⋆ திருக்கோட்டியூரானே (8)

கோவையின் தமிழ் பாடுவார்⋆ குடம் ஆடுவார்
    தட மா மலர்மிசை⋆
மேவு நான்முகனில்⋆ விளங்கு புரி நூலர்⋆
    மேவு நான்மறை வாணர்⋆ ஐவகை வேள்வி
ஆறங்கம் வல்லவர் தொழும்⋆
    தேவ தேவபிரான்⋆ திருக்கோட்டியூரானே (9)

‡ஆலுமா வலவன் கலிகன்றி⋆ மங்கையர்
தலைவன்⋆ அணி பொழில்
சேல்கள் பாய் கழனித்⋆ திருக்கோட்டியூரானை⋆
நீல மாமுகில் வண்ணனை⋆ நெடுமாலை
இன் தமிழால் நினைந்த⋆ இந்
நாலும் ஆறும் வல்லார்க்கு⋆ இடம் ஆகும் வான் உலகே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥